வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 292 of 2023

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கருப்புசாமி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | அம்மாசை | வயது | : | |
| கிராமம் | : | நாதேகவுண்டம்பாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25.03.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 25.03.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கட்டிட கூலி வேலைக்கு சென்று வருகிறேன். எதிரி எனது தம்பி மகன் ஆவார். சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு இரவு 8.00 மணியளவில் என் மனைவி லட்சுமி வெள்ளியங்கிரி வீட்டிற்கு சென்றார். எனக்கும் எதிரிக்கு அடிக்கடி பிரச்சனை ஏற்படும். அன்று இரவு கூட்டமாக இருந்தது அந்த கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் நான் நிலைதடுமாறி கீழே விழுந்து என் பின் பக்க தலையில் அடிப்பட்டது. என் தம்பி மகன் கார்த்ததிக் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்தார். சிகிச்சையில் இருந்தபோது காமநாயக்கன்பாளையம் போலீசார் கைரேகை வாங்கினார்கள். அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கைரேகை என்னுடையதுதான். அந்த கைரேகை மட்டும் **அ.த.சா.ஆ. 1** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி</u>**

**<u>கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) கேள்வி : புகார் வாக்குமூலத்திலும் போலீசார் விசாரணையிலும் கடந்த 29.03.2023 ஆம் அதிகாலை 4.00 மணிக்கு நான் எனது வீட்டின் முன்பாக பொது இடத்தில் நின்றுக்கொண்டிருந்தபோது எதிரி வெள்ளியங்கிரி என்னை பார்த்து கெட்டவார்த்தையால்திட்டி கீழே கிடந்த உருட் கட்டையால் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்று கூறியுள்ளேன் என்றால்

பதில் : சரியல்ல.

2) கேள்வி : தற்போது எதிரி உறவினர் என்பதால் அவரை காப்பாற்றும் பொருட்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

பதில் : சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.25 18:13:29 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : CC 292 of 2023
வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கே.மூர்த்தி | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | கனகராஜ் | வயது | : | 53 |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25.03.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 25.03.2026.**

1) நான் தற்போது காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் கையெழுத்தும் கையொப்பமும் எனக்கு நன்கு பரிட்சயம் வழக்கு கோப்பு ஆவணங்கைள பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.02.2023 ஆம் தேதி முதல்நிலைய காவலர் என்.மதன்குமார் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது அம்மாசை மகன் கருப்புசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய குற்ற எண் 122/2023 சட்டப்பரிவு 294(b),324 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வாதி கொடுத்த புகார் **அ.த.சா.ஆ.2** ஆகும். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.ச.ஆ.3** ஆகும். வழக்கினை உதவி காவல் ஆய்வாளர் திரு.குழந்தைவேல் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு . வாதி கருப்புசாமி அடையாளம் காட்ட சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் சுதாகர் மற்றும் சாமிநாதன் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்துள்ளார். அவை முறையே **அ.த.சா.ஆ.4 மற்றும் 5 ஆகும். அன்றே 8.30** மணிக்கு சுமார் 69.00 செ.மீ நீளமுள்ள உருட்கட்டை ஒன்றை

மேறகண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார்.அந்த பைற்றுதல் மகசர் அ.த.சா.ஆ. 6 ஆகும்.

2)சாட்சிகள் கருப்புசாமி, சின்னசாமி, சுப்பிரமணியம், கார்த்திக், சுதாகர், சாமிநாதன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 07.04.2023 ஆம் தேதி 17.00 மணிக்கு நிலையம் ஆஜரானவரை கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட கருப்புசாமிக்கு சிகிச்சை அளித்த பல்லடம் அரசு மருத்துவமனை மருத்துவர் மதிவதனி அவர்களை விசாரித்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ. 7** ஆகும். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 20.04.2023 ஆம் தேதி சட்டப்பரிவு 294(b),324 இதசவின் குற்றப்பத்திரக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.25 18:13:44 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.